விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம்– 02.51 p.m
விசாரணை முடிக்கப்பட்ட நேரம் – 03.10 p.m

# DEPOSITION OF WITNESS
# IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.1, METTUR

Case No :C.C.No.95/2022

Prosecution side witness : அ.சா.7 Date : 25.02.2025

| | |
|---|---|
| Name : வெங்கடாச்சலம் | Taluk : சேலம் தெற்கு |
| Father Name : சுப்பையாபிள்ளை | Calling : உதவி ஆய்வாளர் தெற்கு |
| Village : சேலம் | Age : 62 |

(Accused present.)

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் தற்போது நங்கவள்ளி காவல் நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து ஒய்வு பெற்றுவிட்டேன். கடந்த 23.03.2022 ம் தேதி 17.30 மணிக்கு நான் நங்கவள்ளி காவல் நிலையத்தில் அலுவலலில் இருந்தபோது காவலர் 2181 கலையரசன் என்பவர் சேலம் அரசு மருத்தவமனையில் உள்நோயாளியாக இருந்த ரவிக்குமார் என்பவரின் விசாரித்து வாக்குமூலம் பெற்று வந்து என் பார்வைக்கு வைத்ததை நங்கவள்ளி காவல் நிலைய குற்ற எண்.95/2022, ச.பி.294(பி), 323, 341, 324, 506(2) இ.த.ச. கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். **(முதல் தகவல் அறிக்கை அ.த.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது).**

2) முதல் தகவல் அறிக்கையின் அசலுடன் வாதியின் புகாருடன் இணைத்து கனம் நீதித்துறை நடுவர் எண்.1 மேட்டுர் அவர்களுக்கும் மற்ற நகல்களை சம்மந்தப்பட்ட உயரதிகாரிகளுக்கு அனுப்பிவைத்து வழக்கினை புலன்விசாரணைக்கு எடுத்துக்கொண்டேன். 23.03.2022 ம் தேதி 18.00 மணிக்கு சம்பவயிடம் சென்று சாட்சிகள் மணிசேகரன், குமார்

ஆகியோர் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வை மகசர், மாதிரிவரைபடம் தயார் செய்தேன். **(மாதிரி வரைபடம் அ.த.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

3) பின்னர் சாட்சிகள் சக்திவேல், சரசு ஆகியோர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். இந்த வழக்கின் சாட்சிகளின் விசாரணையிலிருந்தும் என்னுடைய புலன் விசாரணையிலிருந்து இந்த வழக்கின் எதிரிகள் மதியழகன் மற்றும் தங்கம் இருவரும் சம்பவம் இடத்தில் இல்லை என தெரியவந்ததால் 2 எதிரிகளை நீக்கல் செய்து நீக்கல் அறிக்கை தயார் செய்தேன். **(நீக்கல் அறிக்கை அ.த.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** எதிரி 02.04.2022ம் தேதி மதியம் 12.00 மணியளவில் நங்கவள்ளி பேருந்து நிலையம் வைத்து கைதுக்கான காரணத்தை கூறி கைது செய்து நிலையம் அழைத்து வந்து இருநபர் பிணையில் விடுவித்தேன்.

4) 22.04.2022 ம் தேதி இந்த வழக்கின் வாதிக்கு சிகிச்சையளித்த சேலம் அரசு மருத்துவமனை மருத்துவர் சிவா எனபவர் வாதிக்கு ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என சான்று அளித்தால் இந்த வழக்கின் ச.பி.294(பி), 341, 323, 324, 506(2) இ.த.ச. இருந்து ச.பி.294(பி), 341, 323, 326, 506(2) இ.த.ச. வாக சட்டபிரிவு மாறுதல் அறிக்கை தயார் செய்தேன். **(சட்டபிரிவு மாறுதல் அறிக்கை அ.த.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** மேட்டுர் அரசு மருத்துவமனை மருத்துவர் ராதாகிருஷ்ணன் மற்றும் வாதியிடம் வாக்குமூலம் வாங்கி வந்த முதல் நிலைக்காவலர் கலையரசன் 2181 என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். இறுதியாக புலன் விசாரணை முடித்து எதிரியின் மீது ச.பி.294(பி), 341, 323, 326, 506(2) இ.த.ச. 22.04.2022 இறுதி அறிக்கை தயார் செய்தேன்.

<u>எதிரிகளின் தரப்பில் குறுக்கு விசாரணை – செய்யப்படவில்லை.</u>

<u>விசாரணை முடிக்கப்பட்டது.</u>

**ஒம்/–அ..க.பத்மபிரியா,**
**குற்றவியல் நீதித்துறை நடுவர்.1,**
**மேட்டுர்.**